மோட்டார் வாகன விபத்து கோரிக்கைத் தீர்ப்பாயம், கடலூர்

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.1, கடலூர்

முன்னிலை : - திரு.V. ஆனந்தன் எம்.காம்., பி.எல்.,
மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கைத் தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1, கடலூர்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ஆம் நாள் வியாழன் கிழமை

திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 03ம் நாள்

எம்.சி.ஓ.பி.எண்.1457/2024

1) R. முருகன் (வயது 53)
த/பெ. ரங்கநாதன்
2) M. கனகவள்ளி (வயது 48)
க/பெ. R. முருகன்
3) M. முரளி (வயது 23)
த/பெ. R. முருகன் .... மனுதாரர்கள்

/ எதிர் /

1. D. வெங்கடேஷ்
த/பெ. தாமோதரன்
2. கிளை மேலாளர்
சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,
கடலூர். ... எதிர்மனுதாரர்கள்

* * * * *

மேற்படி இம்மனு கடந்த 07.04.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவமணி அவர்கள் முன்னிலையாகியும், 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வெற்றிவேல் அவர்கள் முன்னிலையாகியும், 1-ம் எதிர்மனுதாரருக்கு உரிய முறையில் அழைப்பாணை சார்வு செய்ய இயலாததினால் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தும், 1-ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததினால் ஒருதலைபட்சமாக பாவிக்கப்பட்டும், இவ்வழக்கில் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இந்த மனுவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை

பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

உத்தரவு

கடந்த 01.04.2024-ம் தேதியன்று நடந்த சாலை விபத்தில் 1, 2 மனுதாரர்களின் மகனும், 3-ம் மனுதாரரின் சகோதரனுமான திருவாசகமூர்த்தி என்பவர் மரணம் அடைந்ததற்கு இழப்பீடாக ரூ.90,00,000/- (ரூபாய் தொண்ணூறு லட்சம் மட்டும்) எதிர்மனுதாரர்களிடமிருந்து கேட்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(1)-ன் கீழ் இந்த மனு மனுதாரர்களால் கொண்டு வரப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் :-

கடந்த 01.04.2024 அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் 1, 2 மனுதாரர்களின் மகன் TN-91-K-6293 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை புவனகிரி - பி.முட்லூர் மெயின் ரோட்டில், முகமது அன்வர் ரைஸ்மில் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி, இடதுபுற ஒரமாக ஓட்டிச் சென்றுக் கொண்டிருந்த போது, அவருக்கு எதிர்திசையில் வந்த 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டதுமான PY-01-CR-0054 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து 1, 2 மனுதாரர்களின் மகன் ஓட்டிச் சென்ற மோட்டார் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என்றும், இவ்விபத்தில் 1, 2 மனுதாரர்களின் மகனுக்கு தலையிலும், உடம்பிலும் பலத்த அடிப்பட்டு மரணகாயம் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அவரை சிதம்பரம் இராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்த போது, அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர் என்றும், மேற்படி விபத்திற்கு முன்னர் 1, 2 மனுதாரர்களின் மகன் ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்தார் என்றும், விபத்து சமயத்தில் அவருக்கு வயது 22 என்றும், அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் Brio Mac Security System-ல் Technician -ஆக வேலை செய்து மாதம் ரூ.1,00,000/-க்கு மேல்

சம்பாதித்து வந்தார் என்றும், இவ்விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவே காரணம் என்பதினால், 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதினாலும் மனுதாரர்களுக்கான இழப்பீட்டு தொகையை எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என மனுதாரர்களால் இம்மனு கொண்டுவரப்பட்டுள்ளது.

3. <u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u> :

மனுதாரர்களின் மனு தேவையற்றது மற்றும் நியாயமற்றது என்பதினால் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும், மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர்த்து இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து சமயத்தில் இந்த எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அந்த வாகனத்தினை ஓட்டிய ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதும், அந்த வாகனத்திற்கு அனுமதிச் சான்று, பதிவுச் சான்று மற்றும் தகுதிச் சான்று இருந்தது என்பதும் மறுக்கப்படுகிறது என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் விபத்து நிகழ்ந்தது என்பது மறுக்கப்படுகிறது என்றும், அவ்வாறு விபத்து நிகழ்ந்தது என்பதினை இந்த மனுதாரரே இந்நீதிமன்றத்தின் முன்பு நிரூபணம் செய்ய வேண்டுமென்றும், இறந்து போன நபரின் வயது, வருமானம் மற்றும் தொழில் ஆகியவற்றினை இந்த மனுதாரர்களே உரிய ஆவணங்களைக் கொண்டு நிரூபிக்க வேண்டுமென்றும், இறந்து போன நபருக்கு இந்த மனுதாரர்கள் வாரிசுதாரர்கள் என்பதினையும், இறந்து போன நபரை சார்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்பதினையும் இந்த மனுதாரர்களே உரிய முறையில் நிரூபிக்க வேண்டுமென்றும், கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகபட்சம் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. <u>இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u> :-

1. வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் நிகழ்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதா?

2. மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறேனில் எவ்வளவு?

3. இழப்பீடு தொகையினை கொடுக்க கடமைப்பட்டது யார்?

2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது.

5. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1-ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்களும், மனுதாரர்களின் தரப்பில் எ.ம.சா.1 விசாரணையில் போது ம.சா.ஆ.13 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **பிரச்சனை எண்.1:-**

மனுதாரர்களின் மனுவிற்கு 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் எடுத்து வைக்கப்படவில்லை. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கு விபத்து ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளையில் 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் விபத்து நிகழ்ந்தது என்பது மறுக்கப்படுகிறது என்றும், அவ்வாறு விபத்து நிகழ்ந்தது என்பதினை இந்த மனுதாரரே நிரூபிக்க வேண்டுமென எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தான் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.2-ன் சாட்சியத்தின் வாயிலாக 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரே அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தினை ஓட்டி வந்து இறந்து போன நபர் ஓட்டிச் சென்ற மோட்டார் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என ஏற்கத்தக்க வகையிலும், நம்பத்தகுந்த வகையிலும் எடுத்துரைத்துள்ளார். ம.சா.2-ன் சாட்சியத்தினை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது அல்லது நம்பக்கூடாது என்பதற்கு 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கத்தக்க காரணம் கூறப்படவில்லை. இவ்வழக்கு விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, 1-ம் எதிர்மனுதாரர்

வாகன ஓட்டுநரின் மீதே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து புலன் விசாரணை அதிகாரியால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.5, 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீதே பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களை தொடர்புபடுத்தும் வகையிலே ம.சா.2-ன் சாட்சியமும் அமைந்துள்ளது. அவ்வாறானச் சூழ்நிலையில் தான் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளையோ அல்லது சம்பவத்தோடு தொடர்புடைய சாட்சிகளையோ இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரிக்க தவறிவிட்டார். 2-ம் எதிர்மனுதாரின் இந்த செயல்படானது மனுதாரர்களின் வழக்கினை ஒப்புக்கொள்ளும் விதமாகவே அமைந்துள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் ஏற்கத்தக்க சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் விபத்து நிகழ்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

7. பிரச்சனை எண்.2:-

1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் விபத்து நிகழ்ந்தது என்பது மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டு விட்டதினால் விபத்தினால் இந்த மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகளுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மனுதாரர்கள் தரப்பில் தங்கள் மனுவில் கூறும் பொழுது விபத்தில் இறந்து போன 1, 2 மனுதாரர்களின் மகனுக்கு விபத்து சமயத்தில் வயது 22 என்றும், அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் தொழில் நுட்ப வேலை செய்து மாதம் 5,000 திர்காம் சம்பாதித்து வந்ததாக வழக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இறந்து போன 1, 2 மனுதாரர்களின் மகனுக்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ் ம.சா.ஆ.6-ஆக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் அவருடைய பிறந்த தேதி 29.11.1999 என காட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கு விபத்தானது 01.04.2024 அன்று நடந்துள்ளது. அதனுடன் ஒப்பிடும் பொழுது விபத்து சமயத்தில் இறந்து போன நபரின் வயது 24 பூர்த்தியடைந்து விட்டதினால் அவருடைய வயதினை 24 என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இறந்து போன 1, 2 மனுதாரர்களின் மகன் வெளிநாட்டில் வேலை பார்த்து

வந்தார் என்பதினை காட்டுவதற்கு இறந்து போன நபரின் கடவுச் சீட்டு ம.சா.ஆ.9-ஆகவும், அவர் வேலை பார்த்ததற்கான அவசர முதலுதவி பயிற்சி எடுத்ததற்கான பயிற்சி அட்டை ம.சா.ஆ.10-ஆகவும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் 1, 2 மனுதாரர்களின் மகனுக்கு வழங்கிய குடியிருப்பு அடையாள அட்டை ம.சா.ஆ.11-ஆகவும், மேலும் வெளிநாட்டில் பயிற்சி எடுத்துக் கொண்டதற்கான பயிற்சி அட்டை ம.சா.ஆ.12-ஆகவும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தான் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி 1, 2 மனுதாரர்களின் மகனுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் செயல்படக் கூடிய Brio Mac Security System என்ற நிறுவனம் வழங்கிய வேலை நியமன உத்தரவு ம.சா.ஆ.8-ஆக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் அவருக்கு 5000 திர்காம் சம்பளம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது மேற்கண்ட ஆவணங்களை பரிசீலிக்கும் பொழுது தெரியவருகிறது. இந்தச் சூழ்நிலையில் தான் 1, 2 மனுதாரர்களின் மகனுக்கான கடவுச் சீட்டு ம.சா.ஆ.9-ஐ பரிசீலிக்கும் பொழுது மேற்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் அவர் டெக்னிஷியனாக வேலை பார்ப்பதற்கு 2023 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், அவர் நமது நாட்டிற்கு ஜனவரி 2023-ல் திரும்பியுள்ளார் என்பதும் தெரியவருகிறது. அதேவேளையில் ம.சா.ஆ.12 பயிற்சிக்கான அடையாள அட்டையினை இந்நீதிமன்றம் பரிசீலிக்கும் பொழுதும், ம.சா.ஆ.10-ஐ பரிசீலிக்கும் பொழுதும் 1, 2 மனுதாரர்களின் மகனுக்கு 2024 மற்றும் 2026 வரை அந்த சான்று வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி 1, 2 மனுதாரர்களின் மகன் இறப்பதற்கு முன்பு வரை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் திர்காம் மதிப்பில் 5000 சம்பளம் பெற்றுள்ளார் என்பது தெரியவருகிறது. இருந்த போதிலும் அவருடைய மாத வருமானத்தினை இந்நீதிமன்றம் பரிசீலிக்கும் பொழுது அவர் பின்னிட்டு வெளிநாடுகளில் சென்று சம்பாதிக்க வாய்ப்புள்ளது என்பதினால் இறந்து போன 1, 2 மனுதாரர்களின் மகனின் மாத வருமானத்தினை ரூ.50,000/- என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. நமது மாண்புமிகு உச்சநீதிமன்ற ***பிரனாய் சேத்தி*** வழக்கின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இறந்து போன நபருக்கான எதிர்கால ஊதிய உயர்வு 40% என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. நமது மாண்புமிகு உச்சநீதிமன்ற

சரளா வர்மா வழக்கின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இறந்து போன நபருக்கான பெருக்கல் குறியீடு 18 என தீர்மானிக்கிறது. இறந்து போன நபர் திருமணமாகாமல் இறந்து விட்டதினால் இறந்து போன நபரின் வருமானத்திலிருந்து அவருடைய செலவுத் தொகையாக 1/2 பாகம் கழிக்க வேண்டுமென இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. முடிவில் இறந்து போன நபரின் வருமான இழப்பீடு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படுகிறது.

1.	இறந்த நபரின் மாத வருமானம்	ரூ.	50,000/-
2.	இறந்த நபரின் எதிர்கால ஊதிய உயர்வு (40%) (50000 x 40/100 = 20,000), (50000 + 20000 = 70,000)	ரூ.	70,000/-
3	இறந்த நபரின் செலவினங்கள் 70000x1/2 = 35000) பாக்கி தொகை (70000–35000 =35000)	ரூ.	35,000/-
4.	இறந்த நபரின் வருமான இழப்பு கணக்கீடு (35000 x 12 x 18 = 75,60,000)	ரூ.	75,60,000/-
5.	இறந்த நபரின் மொத்த வருமான இழப்பீடு	ரூ.	**75,60,000/-**

8. 1, 2 மனுதாரர்கள் இறந்து போன நபரின் பெற்றோர்கள் என்பதும், 3-ம் மனுதாரர் இறந்து போன நபரின் சகோதரர் என்பதும் தெரியவருவதினால் மனுதாரர்களுக்கான உறவு முறை இழப்பிற்கு தலா ரூ.48,400/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. இறந்து போன நபரின் இறுதிசடங்கு மற்றும் ஈமகிரியை செலவுக்காக ரூ.18,150/- இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது. இறந்து போன நபரை விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்பு பிரேத கூராய்விற்கு பின்னிட்டு வீட்டிற்கும் எடுத்து வந்த வகையில் போக்குவரத்து செலவு ஏற்பட்டிருக்கும் என்பதினால் போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/- இழப்பீடு வழங்குவது என தீர்மானிக்கப்படுகிறது. இறந்து போன நபரின் சொத்து இழப்பிற்கு (Loss of Estate) ரூ.18,150/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலேக் கண்டவகையில் மனுதாரர்களுக்கான இழப்பீடு கீழ்கண்ட வகையில் பட்டியலிடப்படுகிறது.

1.	வருமான இழப்பீடு	ரூ.	75,60,000/-
2.	மனுதாரர்களுக்கான உறவு முறை இழப்பிற்கு தலா ரூ.48,400/- வீதம் (48400 x 3 = 1,45,200)	ரூ.	1,45,200/-
3.	இறுதிச்சடங்கு செலவு மற்றும் ஈமக்கிரியை செலவு	ரூ.	18,150/-
4.	போக்குவரத்து செலவு	ரூ.	10,000/-
6.	சொத்து இழப்பு	ரூ.	18,150/-
	கூடுதல்	ரூ.	77,51,500/-
	முழுமையாக்கப்பட்ட கூடுதல் தொகை	**ரூ.**	**77,52,000/-**

9. பிரச்சனை எண்.3:-

மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை கொண்டுவரும் பொழுது 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே 2-ம் எதிர்மனுதாரரும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என வாதிடப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.4-ஆக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதனை பரிசீலிக்கையில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. அதனை பொறுத்து 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு போதிய ஓட்டுநர் உரிமம் உள்ளதாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறானச் சூழ்நிலையில் தான் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் வேறு காப்பீட்டு விதிமீறல் செய்திருப்பதாக குறிப்பிட்டு எந்த எதிர்வாதமும் எடுத்த வைக்க தவறிவிட்டக் காரணத்தினால் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் எவ்வித காப்பீட்டு விதிமீறலில் ஈடுபடவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரருக்கான இழப்பீட்டு தொகையை 2-ம் எதிர்மனுதாரரே செலுத்த வேண்டுமென இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு விடை காண்கிறது.

1. முடிவில் மனுதாரர்களின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக **ரூ.77,52,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.
2. மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP14572024, IFSC Code : IOBA0001355 ல் NEFT/RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-009081-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
3. மேற்படி இழப்பீட்டு தொகையில் 1, 2 மனுதாரர்களுக்கு தலா ரூ.34,88,400/- (தலா ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து நானூறு மட்டும்) 3-ம் மனுதாரருக்கு ரூ.7,75,200/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து இருநூறு மட்டும்) கிடைக்கத்தக்கது என உத்தரவிடப்படுகிறது.
4. மேற்படி இழப்பீட்டு தொகையில் மனுதாரர்கள் அவர்களுக்குரிய தொகையில் பாதியையும் அவர்களுக்கான முழு இழப்பீட்டு தொகைக்கான வட்டியையும் மற்றும் விகிதாச்சார செலவு தொகையையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. அவர்களுக்கான பாக்கி இழப்பீட்டு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மூன்றாண்டு காலத்திற்கு நிரந்தரமாக வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

5. மனுதாரர்கள் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரர்களின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரர்களே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும்.
6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.84,520/- என நிர்ணயிக்கப்படுகிறது.
7. மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
8. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரிதி எடுக்கப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் நாள் வியாழன் கிழமை இந்த உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

V ANANTHAN

Digitally signed by V ANANTHAN
Date: 2026.04.16 18:21:16 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1,
கடலூர்.

Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020

1.	(Name and Address of the Claimant) (மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1) R. Murugan, S/o. Ranganathan (Age 53) residing at: 532, Pillaiyarkovil Street, P. Manaveli, Budavarayanpettai, Cuddalore – 608601. 2) M. Kanagavalli, W/o. R.Murugan (Age 48) residing at: 532, Pillaiyarkovil Street, P. Manaveli, Buthavarayanpettai, Cuddalore – 608601. 3) M. Murali, S/o. R. Murugan (Age 23) residing at : 2/66, Pillaiyarkovil Street, B. Manaveli, Buthavarayanpettai, Bhuvanagiri Taluk, Cuddalore – 608601.
2.	Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1) D. Vengadesh, S/o. Dhamotharan, 10 Manakulavinayagar Nagar, Nellithope, Puducherry – 605001. 2) Manager, Cholamandalam MS General Insurance Co. Ltd., Be Well Hospitals Complex, Bharathi Road, Cuddalore – 607001.
3.	Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்)	28.08.2024
4.	Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்)	16.04.2026
5.	Amount of Award (வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை)	ரூ.77,52,000/- (ரூபாய் எழுபத்து ஏழு லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்)
6.	Interest Rate Applicable	7.5%
7.	Date from which interest is payable (எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்)	மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வட்டி வழங்க வேண்டும்
8.	Costs if any	2-ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலவு தொகையான ரூ.161566.50/- செலுத்த வேண்டும். ***(Stamp Duty of Rs.76892.50 – 375 = Rs.76517.50/-) The Petitioner shall pay the balance Court fee of Rs.76517.50/- within One Month***

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td colspan="4"><u>Particulars of costs</u></td></tr>
<tr><td colspan="2"><u>For Petitioner</u></td><td colspan="2"><u>For Respondent:</u></td></tr>
<tr><td></td><td>Rs.</td><td></td><td>Rs.</td></tr>
<tr><td>Court fee</td><td>76892.50</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp in Vakalath</td><td>10.00</td><td>Stamp on Vakalath</td><td>10.00</td></tr>
<tr><td>Fee for services of process</td><td>9.00</td><td></td><td></td></tr>
<tr><td>Stamp on Exhibits</td><td>35.00</td><td></td><td></td></tr>
<tr><td>Writing charge</td><td>100.00</td><td></td><td></td></tr>
<tr><td>Advocate fee</td><td>84520.00</td><td></td><td></td></tr>
<tr><td>Total</td><td>161566.50</td><td>Total</td><td>10.00</td></tr>
</table>
</td></tr>
<tr><td>9.</td><td>The Mode and manner of deposit of Compensation
(இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை)</td><td><u>முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.</u>
1) முடிவில் மனுதாரர்களின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.77,52,000/- 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.
2) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP14572024, IFSC Code : IOBA0001355 ல் NEFT/RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-</td></tr>
</table>

		009081-2024 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 3) மேற்படி இழப்பீட்டு தொகையில் 1, 2 மனுதாரர்களுக்கு தலா ரூ.34,88,400/- (தலா ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து நானூறு மட்டும்) 3-ம் மனுதாரருக்கு ரூ.7,75,200/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து இருநூறு மட்டும்) கிடைக்கத்தக்கது என உத்தரவிடப்படுகிறது. 4) மேற்படி இழப்பீட்டு தொகையில் மனுதாரர்கள் அவர்களுக்குரிய தொகையில் பாதியையும் அவர்களுக்கான முழு இழப்பீட்டு தொகைக்கான வட்டியையும் மற்றும் விகிதாச்சார செலவு தொகையையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. அவர்களுக்கான பாக்கி இழப்பீட்டு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மூன்றாண்டு காலத்திற்கு நிரந்தரமாக வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது. 5) மனுதாரர்கள் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரர்களின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரர்களே மேலொப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும். 6) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.84,520/- என நிர்ணயிக்கப்படுகிறது. 7) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

		8) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
10.	The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை)	Through *NEFT / RTGS*
11.	Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்)	பாக்கி நீதிமன்றக் கட்டணம் ஏதேனும் இருப்பின் மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-

ம.சா.1 : முருகன்

ம.சா.2 : ஆறுமுகம்

மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-

ம.சா.ஆ.1 : வழக்கு விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.2 : இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவரின் பிரேத கூராய்வு அறிக்கை ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.3 : இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவரின் வாரிசுகளைக் காட்டக்கூடிய வாரிசு சான்றிதழ் ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.4 : 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.5 : வழக்கு விபத்து சம்மந்தமாக புலன் விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இறுதி அறிக்கை ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.6	:	இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவரின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் அசல்
ம.சா.ஆ.7	:	இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவரின் ஓட்டுநர் உரிமம் ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.8	:	இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவருக்கு BrioMac Security Systems வழங்கிய வேலை நியமய உத்தரவு ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.9	:	இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவரின் கடவுச் சீட்டு அசல்
ம.சா.ஆ.10	:	இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவருக்கு Bureau Link நிறுவனம் வழங்கிய சான்றிதழ் அசல்
ம.சா.ஆ.11	:	இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவருக்கு ஐக்கிய அரசு எமிரேட்ஸ் வழங்கிய குடியிருப்பு அட்டை அசல்
ம.சா.ஆ.12	:	இறந்து போன திருவாசகமூர்த்தி என்பவர் பெயருக்கு ஏற்பட்ட பயிற்சி அடையாள அட்டை அசல்
ம.சா.ஆ.13	:	கனகவள்ளி என்பவர் பெயரில் பராமரிக்கப்பட்ட கணக்கு பட்டியல் ஒளிப்பட நகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:

எ.ம.சா.1	:	அபூர்பபூங்குன்றன் (உதவி மேலாளர், மாநில பாரத வங்கி)
எ.ம.சா.2	:	அஜித் (2-ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தின் சட்ட மேலாளர்)

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

V ANANTHAN
Digitally signed by V ANANTHAN
Date: 2026.04.16 18:21:28 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1,
கடலூர்.